DINAMANI

PAGE NO: 02

DATE: 13.08.2023



# தேசிய கல்விக் கொள்கையால் மாணவர்கள் திறன் மேம்படும்

## புதுச்சேரி மத்திய பல்கலை. துணைவேந்தர்



புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தில், தேசியக் கல்விக் கொள்கையை செயல்படுத்துவது தொடர்பான இணைப்புக் கல்லூரி முதல்வர்களுக்கான பயிற்சி முகாமை தொடங்கி வைத்த துணைவேந்தர் குர்மீத்சிங். உடன், பல்கலைக்கழக இயக்குநர் தரணிக்கரசு, பேராசிரியர் பாஞ்ராமலிங்கம் உள்ளிட்டோர்.

புதுச்சேரி, ஆக.12: தேசிய கல்விக் கொள்கையால் மாணவர்களின் திறன் மேம்படும் என்று புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத் துணைவேந்தர் குர்மீத்சிங் தெரிவித்தார்.

புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தில் தேசிய கல்விக் கொள்கை பாடத் திட்டம் நிகழாண்டு முதல் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், பல்கலைக்கழகத்தின் இணைப்பு கல்லூரிகளிலும் நிகழாண்டு (2023-24) முதல் தேசிய கல்வி கொள்கையைச் செயல்படுத்தநடவடிக்கைமேற்கொள்ளப்பட்டு, அதற்கான பாடத் திட்டமும் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரியில் தேசிய கல்விக் கொள்கையின் பாடத் திட்டத்தைச் செயல்படுத்துவது தொடர்பாக கல்லூரி முதல்வர்களுக்கான பயிற்சி முகாம் சனிக்கிழமை நடைபெற்றது.

பல்கலைக்கழக மனித வள மேம்பாட்டு உயர் பயிற்சி நிறுவனத்தில் நடைபெற்ற முகாமில் அந்நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் பாஞ்ராமலிங்கம் நோக்கவுரையாற்றினார்.

நிகழ்ச்சியில், துணைவேந்தர் குர்மீத் சிங் பேசியது: கல்லூரிக் கல்வி நிறுவனங்களில் மாணவர்களுக்கு தேர்வு நடத்தி பட்டச் சான்றிதழ்கள் வழங்கப்படுகிறது. ஆனால், வேலைவாய்ப்புகளை மாணவர்கள் தேடிச் செல்லும் நிலையே உள்ளது. அதே நேரத்தில், தேசிய கல்விக் கொள்கையின்படி இனி வேலைவாய்ப்புக்கு ஏற்ப திறன் மிகுந்த மாணவர்களை உருவாக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

திறன் மிகுந்த மாணவர்களை உருவாக்கும் இலக்கை நோக்கியே கல்வி நிறுவனங்கள், ஆசிரியர்கள் பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அதன்படியே, மாணவர்களின் கற்றலுக்கானதேவையை ஏற்படுத்துதல், சவால்களை எதிர்கொள்ளும் வகையில் மாணவர்களைத் தயார்படுத்துதல், தேவைக்கேற்ப மாணவர்களை முழுமையாக மாற்றுதல் என 3 முக்கிய அம்சங்களை தேசிய கல்விக் கொள்கையில் நாம் கடைப்பிடிப்பது அவசியமாகிறது.

அறிவியல், தமிழ், சமூகவியல், மொழியியல் என எந்தப் படிப்புகளை கற்றாலும், அதன்பிறகு எந்தவித முன் தயாரிப்புமின்றி நேரடியாக மத்திய தேர்வாணையத் தேர்வுகளை எழுதும் வகையில் மாணவர்களை தயார்படுத்தும் வகையில் பாடத் திட்டங்கள் உள்ளன.

தேசிய கல்விக் கொள்கையின்படி, மாணவர்கள் எந்த நேரத்திலும் படிப்பினை விட்டு விலகிச் செல்லவும், எந்த நேரத்திலும் அதை மீண்டும் தொடரவும் முடியும். இந்தக் கல்விக் கொள்கையில் மாணவர்களுக்குத் தோல்வி என்பதே இல்லை. வேலைவாய்ப்புக்கு ஏற்ப மாணவர்களை தயார்படுத்த முடியவில்லை எனில் அதற்கு அந்தந்த கல்வி நிலையங்களும், ஆசிரியர்களுமே பொறுப்பேற்கும் நிலையுள்ளது என்றார்.

நிகழ்ச்சியில் பல்கலைக்கழக இயக்குநர் தரணிக்கரசு, பதிவாளர் ரஜனீஷ் புட்டானி, பல்கலைக்கழக புல முதன்மையர் சந்திரசேகர ராவ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

DINAKARAN

PAGE NO: 11

DATE: 13.08.2023

# புதுவை பல்கலைக்கழகத்தில் முதுகலை படிப்புகளுக்கு விண்ணப்பிக்கும் தேதி நீட்டிப்பு

**புதுச்சேரி, ஆக. 13:** புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் முதுகலை பட்டப்படிப்புகள் மற்றும் முதுகலை டிப்ளமோ படிப்புகளுக்கு விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள் வரும் 18ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் உதவி பதிவாளர் (மக்கள் தொடர்பு) மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

பல்கலைக்கழக பொது நுழைவுத்தேர்வு (கியூட் - பிஜி) தேர்வு முடிவுகளின் அடிப்படையில் புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் பல்வேறு முதுகலை படிப்புகள் மற்றும் முதுகலை டிப்ளமோ படிப்புகளில் சேர்வதற்கான ஆன்லைன் விண்ணப்ப படிவத்தை சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் வரும் 18ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. முன்னதாக பதிவு செய்து முடிக்க முடியாத அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும், புதிதாக விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்களுக்கும் இந்த வாய்ப்பு வழங்கப்படுகிறது.

புதுச்சேரி பல்கலைக்கழகத்திற்கு தேவையான கியூட் (பிஜி) - 2023ல் தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரர்கள் 2023-24ம் கல்வியாண்டில் வழங்கப்படும் பல்வேறு முதுகலை பட்டப்படிப்பு மற்றும் முதுகலை பட்டயப் படிப்புகளுக்கான சேர்க்கைக்கு *https://www.pondiuni.edu.in/admissions-2023-24* என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம். முதுகலை பட்டப்படிப்புக்கான தகுதி அளவுகோல்களுக்கு பல்கலைக்கழக இணையதளத்தில் உள்ள தகவல் சிற்றேட்டையும் பார்க்கவும். மேலும் சமீபத்திய தகவல்களுக்கு விண்ணப்பதாரர்கள் பல்கலைக்கழக இணையதளத்தை தவறாமல் பார்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

THE HINDU TAMIL

PAGE NO: 04

DATE: 13.08.2023

### நடப்பு கல்வியாண்டில் தேசிய கல்விக் கொள்கை அமல்

# பாடத்திட்டத்தைச் செயல்படுத்த கல்லூரி முதல்வர்களுக்கு பயிற்சி

**புதுச்சேரி**

புதுச்சேரி மத்திய பல்கலைக் கழகத்தில், தேசியக் கல்விக் கொள்கை பாடத்திட்டம் நடப்பு கல்வியாண்டு (2023-24) முதல் செயல்படுத்தப்படும் என அறிவிக் கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் பல்கலைக்கழகத்தின் இணைப்பு கல்லூரிகளிலும் நடப்பு கல்வி யாண்டு முதல் தேசிய கல்வி கொள்கையைச் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, அதற்கான பாடத்திட்டமும் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரியில் தேசிய கல்வி கொள்கையின் பாடத்திட்டத் தைச் செயல்படுத்துவது தொடர் பாக கல்லூரி முதல்வர்களுக்கான பயிற்சி முகாம் நேற்று நடைபெற்றது.

நிகழ்ச்சியில் பல்கலைக்கழக இயக்குநர் தரணிக்கரசு, பதிவாளர் ரஜனீஷ் புட்டானி, பல்கலைக்கழக புல முதன்மையர் சந்திரசேகர ராவ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

பல்கலைக்கழக மனித வள மேம்பாட்டு உயர் பயிற்சி நிறுவனத்தில் நடந்த இபபயிற்சி முகாமில் அந்நிறுவன இயக்குநர் பேராசிரியர் பாஞ்ராமலிங்கம் நோக்கவுரையாற்றினார்.

நிகழ்ச்சியில் பேசிய பல்கலைக் கழகத் துணைவேந்தர் குர்மீத் சிங், "தற்போது மாணவர்கள் படித்து முடித்து வேலைவாய்ப்புகளை தேடிச் செல்லும் நிலை உள்ளது. தேசியக் கல்வி கொள்கையின்படி இனி வேலைவாய்ப்புக்கு ஏற்ப திறன் மிகுந்த மாணவர்களை உருவாக்க வேண்டும். சவால் களை எதிர்கொள்ளும் வகையில் தயார்படுத்துதல், தேவைக்கேற்ப மாணவர்களை முழுமையாக மாற்றுதல் என முக்கிய அம்சங் களை கடைப்பிடிப்பது அவசிய மாகிறது. வேலை வாய்ப்புக்கு ஏற்ப மாணவர்களை தயார்படுத்த முடியவில்லை எனில், அதற்கு அந்தந்த கல்வி நிலையங்களும், ஆசிரியர்களுமே பொறுப்பேற்கும் நிலையுள்ளது" என்றார்.

DAILY THANTHI

PAGE NO: 15 DATE : 13.08.2023

**புதுவை பல்கலைக்கழக**

# முதுகலை பட்டப் படிப்புகளுக்கு விண்ணப்பிக்க காலக்கெடு நீட்டிப்பு

புதுச்சேரி, ஆக.13-

புதுவை பல்கலைக்கழகத்தில் கியூட் தேர்வு அடிப்படையில் முதுகலை பட்டப்படிப்பு மற்றும் பட்டய படிப்புகளுக்கு மாணவர் சேர்க்கை நடக்கிறது. இதற்காக ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகின்றன. இதற்கான காலக் கெடு முடிவடைந்த நிலையில் தற்போது வருகிற 18-ந்தேதி வரை விண்ணப்பிக்கலாம் என்று நீட்டிக்கப்பட்டுள்ளது. இதுவரை விண்ணப்பிக்காதவர்கள் விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

இதற்கான விண்ணப்பங்களை *https://www.pondiuni.edu.in/admissions-2023-24* என்ற இணையதள முகவரியில் உள்ளது. இதற்கான தகுதி குறித்த விவரங்கள் புதுவை பல்கலைக்கழக இணையதளத்தில் உள்ளது.